# புதுக்கோட்டை, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
## முன்னிலை – முனைவர் சா.சத்தியமூர்த்தி

ந.க.எண் 6336/அ1/2021 நாள் 25.10.2021

பொருள் - பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020 (TNPSC Group IV) இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் பெற்று - புதுக்கோட்டை வருவாய் மாவட்டம் – புதுக்கோட்டை கல்வி மாவட்டம் – புதுக்கோட்டை வட்டாரக் கல்வி அலுவலகத்தில் – இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் – செல்வி.சி.அன்புச்செல்வி என்பாருக்கு – 21.09.2020 முற்பகல் முதல் – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை –
1. அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வித் (வ.செதி) துறை நாள் 18.05.2018.
2. புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3830/அ1/2020, நாள் 17.09.2020.
3. புதுக்கோட்டை வட்டாரக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண் 764/அ1/2021, நாள் 30.09.2021

-------

ஆணை-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2018–2019 மற்றும் 2019–2020 (TNPSC Group IV) தெரிவு செய்யப்பட்டு பார்வை(2)ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் செய்யப்பட்டு புதுக்கோட்டை வருவாய் மாவட்டம், புதுக்கோட்டை கல்வி மாவட்டம், புதுக்கோட்டை வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் செல்வி.சி.அன்புச்செல்வி என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியில் கீழ்கண்டவாறு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண் | பணியாளர் பெயர் / பதவி / பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 01. | 143 | செல்வி.சி.அன்புச்செல்வி<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக் கல்வி அலுவலகம்<br>புதுக்கோட்டை | 21.09.2020 முற்பகல் | 21.09.2020 முற்பகல் |

மேற்கண்டுள்ள பணியாளர் இளநிலை உதவியாளர் பணியில் தொடர் மூன்றாண்டுகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். இத்தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

பணிவரன்முறை சார்பாக உரிய பதிவுகள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

முதன்மைக் கல்வி அலுவலர்
புதுக்கோட்டை

பெறுநர் – சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)
நகல் –வட்டாரக் கல்வி அலுவலர்
புதுக்கோட்டை
நகல் –
மாவட்டக் கல்வி அலுவலர்
புதுக்கோட்டை